மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் அறைகூவல் விடுக்கவில்லை, அழைப்புக் கூவல்தான். *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், உரையை முடித்துவிடுங்கள்.

திரு. து. ரவிக்குமார்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்கள் சொன்ன அந்தத் திருத்தத்தை ஏற்றுக்கொள்கிறேன். அழைப்பு விடுத்திருக்கிறார்கள். அந்த அழைப்பை எதிர்க்கட்சியினர் ஏற்றுக்கொண்டு தமிழக மக்களுடைய உணர்வை வெளிப்படுத்தும் விதமாக ஒட்டுமொத்தமாக நாங்கள் எல்லாம் ஒன்றுபட்டு நிற்கிறோம் என்று கர்நாடகாவிற்குத் தெரிவிக்கும் விதமாக ஒரு அனைத்துக் கட்சி கூட்டத்திற்கு அவர்கள் ஒத்துழைப்புத் தர வேண்டும் என்பதுதான் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியினுடைய கோரிக்கை. அதை நான் இங்கு பதிவு செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டணி தர்மத்தை நீங்கள் கடைப்பிடிக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு ஒரு நியாயம் இருக்கிறது. எப்போது வேண்டுமானாலும் எதைவேண்டுமானாலும் பேசலாம் என்று சொல்வது உண்மையிலேயே சட்டமன்ற மரபுக்கு ஒவ்வாத ஒன்று. இதனை தயவுசெய்து அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களும், திரு. ஜி.கே. மணி அவர்களும் சிந்திக்க வேண்டும். *(குறுக்கீடு)* அவர் அல்ல. நீங்கள் சிந்திக்க வேண்டும். *(குறுக்கீடுகள்)*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *நீங்கள் யாரைச் சொல்கிறீர்கள்? நீங்கள் சொல்வது யாருக்கு? திரு. நன்மாறன் அவர்களுக்கா?*

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னிக்க வேண்டும். நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார் அவர்களைச் சொல்கிறேன். அதாவது இதில் யார் சொல்வது சரி, யார் சொல்வது தவறு என்பது இந்தப் பிரச்சினையில் இல்லை. இந்தப் பிரச்சினையை ஆளுகின்ற ஆட்சி, அரசு, எப்படிக் கையாண்டால் தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய

TRUTH ALONE TRIUMPHS

ஜீவாதார உரிமைகள் நமக்கு உரிய காலத்தில் கிடைக்கும், உரிய கடமையைச் செய்யவேண்டிய இடத்தில் இருக்கின்ற ஆளும்கட்சி செய்யவேண்டிய கடமை என்ன என்பதைத்தான் நான் இந்த அவைக்குச் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதைவிடுத்து இதைத் திசை திருப்பிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உட்கார்ந்து பேசுவோம். இங்கு அல்ல. சட்டமன்றத்திலே இருக்கின்ற கட்சிகளுடைய தலைவர்களுடன் உட்கார்ந்து பேசுவோம். தேவைப்பட்டால், வெளியிலே இருக்கின்ற தலைவர்களைக்கூட, அந்தக் கூட்டத்திற்கு அழைப்போம். நீங்கள் என்ன யோசனைகளைச் சொல்கிறீர்களோ, அந்த யோசனைகள் வெற்றி பெறுமா; வெற்றி பெறாதா? அவை நிறைவேறுமா; நிறைவேறாதா என்பதையெல்லாம் இருசாராரும் சிந்திப்போம்; அதைப்பற்றி விவாதிப்போம். இறுதியாக எடுக்கின்ற முடிவின்படி, அரசு தனது கடமையை ஆற்றும் என்றுதான் நான் சொன்னேன்.

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பிரச்சினையில் இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னால், இந்த ஆட்சி கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டங்களிலும் நாங்கள் கலந்துகொண்டிருக்கிறோம். அதனை நாங்கள் உதாசீனப்படுத்தவில்லை. நன்றாகப் புரிந்துகொள்ளவேண்டும். மாண்புமிகு உறுப்பினர் அண்ணன் திரு. பீட்டர் அல்போன்ஸ், அண்ணன் திரு. ஜி.கே. மணி ஆகியோர் முழுமையாகத் தெரிந்துகொள்ளவேண்டும். இந்த வழக்கில் இவர்கள் சொல்கின்ற வாதத்தை எடுத்துக்கொண்டாலும், அங்கு இருக்கக்கூடிய நடுவர் மன்றம் ஆளும்கட்சியினுடைய கருத்தை உதாசீனப்படுத்தி, நீங்கள் தமிழகத்தில் இருக்கின்ற அனைத்து கூட்டணிக் கட்சிகளும் ஒன்றாகச் சேர்ந்து வந்தால்தான் நியாயமான தீர்ப்பு வழங்குவோம் என்று சொன்னார்களா? இல்லை. நம்முடைய நியாயமான . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இது பொதுப் பிரச்சினை. நீங்கள் அனைவரும் சேர்ந்து போனால் என்ன தவறு இருக்கிறது?

திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாங்கள் போய்க்கொண்டுதான் இருக்கிறோம். அவர்கள்